# பொருளியல்

## தேசிய கணக்கீடு தொடர்பான வினாக்கள்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

## பல்தேர்வு வினாக்கள்

1) தேசிய கணக்கீட்டில் இரட்டை எண்ணல் தவறு ஏற்பட காரணமாக அமைவது.
    1. கூட்டிய பெறுமதிகள் கருத்தில் எடுக்கப்படுதல்.
    2. மொத்த உற்பத்திப் பெறுமதிகள் கருத்தில் எடுக்கப்படுதல்.
    3. வரிகள் உள்ளடக்கப்படல்.
    4. இறுதிப் பொருள் பெறுமதி கருத்தில் எடுக்கப்படல்.
    5. காரணிச் செலவுகள் கருத்தில் எடுக்கப்படல்.

2) பின்வரும் சமன்பாடுகளில் ஏற்புடையது எது?
    1. சந்தை விலை = அடிப்படை விலை + தேறிய மறைமுக வரி.
    2. உற்பத்தியாளர் விலை = நுகர்வோர் விலை - தேறிய மறைமுகவரி
    3. சந்தை விலை = உற்பத்தியாளர் விலை + இறக்குமதி தொடர்பானவரிகள்
    4. அடிப்படைவிலை = காரணிச் செலவு விலை + பெறுமானத் தேய்வு
    5. சந்தை விலை = அடிப்படை விலை + உள்நாட்டுத் தேறிய மறைமுகவரிகள்

3) வருமான வழிக் கணிப்பீட்டில் உள்ளடங்காத வருமானமாகக் கருதப்பட முடியாதது.
    1. ஓய்வூதிய பெறுவனவு
    2. சுயதொழில் வருமானம்
    3. பங்கு விற்பனை வருமானம்
    4. வீட்டுத்துறை அரசிடம் பெறும் வட்டி வருமானம்
    5. தேசிய லொத்தர் சபையில் வெற்றிபெற்ற சீட்டு வருமானம்

4) தற்போது மத்திய வங்கியின் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி கணிப்பீட்டை சரியாகக் காட்டுவது.
    1. குறித்த காலத்தில் இலங்கையினுள் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உற்பத்திப் பெறுமதி.
    2. உற்பத்தியாளர் விலையில் கணிப்பிடப்பட்ட உள்நாட்டு உற்பத்திகளின் மொத்தக் கூட்டிய பெறுமதியுடன் தேறிய இறக்குமதிகள் தொடர்பான வரி சேர்க்கப்படுவது.
    3. அடிப்படை விலையிலான உள்நாட்டு உற்பத்திகளின் கூட்டிய பெறுமதி.
    4. நடைமுறை காரணிசெலவு அடிப்படையிலான உற்பத்திப் பெறுமதிகள்.
    5. நடைமுறைக் காரணிச் செலவு அடிப்படையிலான உற்பத்திப் பெறுமதிகள்.

5) மொத்த உள்நாட்டுச் செலவு என்பது பின்வருவனவற்றில்.
    1. வீட்டுத்துறை நுகர்வு + அரச நுகர்வு + மொத்த நிலையானமூலதனசெலவு
    2. மொத்த நுகர்வுச் செலவு + மொத்த நிலையான மூலதன ஆக்க செலவு
    3. அரச நுகர்வு + மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச் செலவு
    4. தனிநபர் நுகர்வு + அரச நுகர்வு + மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச் செலவு
    5. வீட்டுத்துறை நுகர்வு + அரச நுகர்வு + மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச் செலவு

6) பின்வருவனவற்றுள் உற்பத்தி எல்லையினுள் அடங்காத விடயம்.
    1. சந்தையில் விற்பனையாகும் அனைத்துப் பொருட்கள் சேவைகளும்.
    2. உற்பத்தி செய்தவற்றுள் உற்பத்தியாளன் தமக்காக வைத்திருக்கும் பகுதி
    3. சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்பவேலைகளும் தனிப்பட்ட வேலைகளும்
    4. பணப்பத்திரங்களுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்.
    5. துணி தைத்தல், தொப்பி செய்தல் போன்ற வீட்டுப் பொருட்களின் உற்பத்தி


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

7) மொத்தத் தேசிய வருமானம் தரப்படுமிடத்து மொத்த உள்நாட்டுச் செலவினைக் கணிப்பதற்கு எத்தகைய சீராக்கங்களை மேற்கொள்வீர்.

| இல | ஏற்றுமதி | இறக்குமதி | தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் |
|---|---|---|---|
| 1. | கூட்டுதல் | கூட்டுதல் | கூட்டுதல் |
| 2. | கழித்தல் | கழித்தல் | கழித்தல் |
| 3. | கூட்டுதல் | கழித்தல் | கழித்தல் |
| 4. | கழித்தல் | கூட்டுதல் | கூட்டுதல் |
| 5. | கூட்டுதல் | கழித்தல் | கூட்டுதல் |

8) கற்பிதமான தேசிய கணக்கீட்டின் தரவுகள் வருமாறு.

| வகை | தொகை மில்லியன் ரூபா |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 2300 |
| ஏற்றுமதிகள் | 800 |
| வீட்டுத்துறை நுகர்வு | 750 |
| அரசின் நுகர்வுச் செலவு | 600 |
| இறக்குமதிகள் | 1000 |

மேலே தரவினைப் பயன்படுத்தி மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் பெறுமதி யாது?

1. 1350 மில்லியன் ரூபா
2. 1150 மில்லியன் ரூபா
3. 2150 மில்லியன் ரூபா
4. 750 மில்லியன் ரூபா
5. 2500 மில்லியன் ரூபா

9) ஒரு நாட்டின் தேசியக் கணக்கீடு தொடர்பான தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| விடையம் | தொகை மில்லியன் |
|---|---|
| மொத்த உள்நாட்டுச் செலவு | 1800 |
| தேறிய ஏற்றுமதிகள் | -400 |
| தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் | 200 |
| தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல் | 100 |
| நேர் வரிகள் | 50 |

மேலே உள்ள தரவுகளின் படி செலவிடக்கூடிய மொத்தத் தேசிய வருமானம் யாது?

1. 2200 மில்லியன்
2. 1400 மில்லியன்
3. 1700 மில்லியன்
4. 1750 மில்லியன்
5. 1450 மில்லியன்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

10) பின்வருவனவற்றுள் மிகச் சரியான விடையினைக் கொண்ட தொகுதியினை இனங்காண்க.

| இல | வளப்பயன்பாடு | வளக்கிடைப்பனவு |
|---|---|---|
| 1. | ஏற்றுமதி +இறக்குமதி + முதலீடு | உள்நாட்டுற்பத்தி + இறக்குமதி |
| 2. | ஏற்றுமதி + முதலீடு+ உற்பத்தி | இறக்குமதி + உள்நாட்டுற்பத்தி |
| 3. | நுகர்வு + முதலீடு + ஏற்றுமதி | உள்நாட்டுற்பத்தி + பண அளவு |
| 4. | நுகர்வு + முதலீடு + ஏற்றுமதி | உள்நாட்டுற்பத்தி + இறக்குமதி |
| 5. | நுகர்வு + முதலீடு + இறக்குமதி | உள்நாட்டுற்பத்தி + ஏற்றுமதி |

தொகுப்பு :- திரு.ஆ.பிரபாகரன் ஆசிரியர் - பொருளியல் ( யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ( கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**பின்வரும் சமன்பாடுகளிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.**

1) சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு = அடிப்படை விலைகளில் மொத்தக் கூட்டிய பெறுமதி + ........................

2) ........................ = மெத்தத் தேசிய வருமானம் - மொத்த உள்நாட்டு உற்பத்தி

3) தேறிய மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி - ........................

4) தேறிய தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + ............... ............... ............... - நிலையான மூலதன நுகர்வு

5) உற்பத்தியாளன் விலை = அடிப்படை விலை + ........................

6) அடிப்படை விலை = காரணிச் செலவு + ........................

7) கொள்வனவாளர் விலை = உற்பத்தியாளர் விலை + ............... ............... ............... - கழிக்கப்பட முடியாத VAT

8) மொத்த உள்நாட்டு வரு-மானம் = வேலை வாய்ப்பு வருமானம் + வாடகை வருமானம் ............... ............... ............... + ............... ............... ...............

9) மொத்தத் தேசிய வருமானம் = தேறிய தேசிய வருமானம் + ........................

10) மொத்தத் தொழிற்பாட்டு மிகை = தேறிய தொழிற்பாட்டு மிகை + ............... ............... ............... - நிலையான மூலதன நுகர்வு

11) முதனிலை வருமானம் = ஊழியர் வருமானம் + ............... ............... ............... + கலப்பு வருமானம் + உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறியவரி

12) ........................ ........................ ........................ = மொத்தத் தேசிய வரு-மானம் + வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய நடைமுறை மாற்றங்கள்.

13) செலவிடக்கூடிய தனியார் வருமானம் = தனியார் வருமானம் - ........................

14) சந்தைவிலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி = அடிப்படை விலைகளில் மொத்த உள்நாட்டு வரு-மானம் + ........................ ........................

15) மொத்த உள்நாட்டுச் சேமிப்பு = தனியார் நுகர்வு + .................. .................. .................... + மொத்த முதலீடு


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16) | மொத்த உள்நாட்டு உற்பத்தி | = | மொத்த உள்நாட்டுச் செலவு | + | ஏற்றுமதி | - ........................ ......................... |
| 17) | மொத்த தேசிய வருமானம் | = | மொத்த உள்நாட்டுச் செலவு | + | .................. .................. .................. | + வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் |
| 18) | மொத்த உள்நாட்டுச் சேமிப்பு | = | மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | - | ......................... | |
| 19) | தேசிய சேமிப்பு | = | செலவிடத்தக்க மொத்தத் தேசிய வருமானம் | - | ......................... | |
| 20) | ........................... ........................... | = | மொத்த உள்நாட்டுச் செலவு | + | ஏற்றுமதி | |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கட்டுரை அமைப்பு வினாக்கள்

1) கற்பிதமான பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கீடு தொடர்பான தரவுகள் வருமாறு. (பெறுமதிகள் யாவும் மில்லியன் ரூபா ஆகும்.)

| விபரம் | தொகை |
|---|---|
| விவசாயப் பொருளாதார நடவடிக்கையின் கூட்டிய பெறுமதி | 10000 |
| கைத்தொழில் பொருளாதார நடவடிக்கையின் கூட்டிய பெறுமதி | 18000 |
| பணிகள் நடவடிக்கையின் கூட்டிய பெறுமதி | 25000 |
| நிலையான மூலதன நுகர்வு | 2000 |
| உற்பத்தி மீதான மானியங்கள் கழித்த வரிகள் | 5000 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | 9000 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல் | 6000 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி [2010=100] | 120 |

**பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.**

1. சந்தை விலையில் மொத்த உள்நாட்டுற்பத்தி?
2. சந்தை விலையில் மொத்தத் தேசிய வருமானம்?
3. சந்தை விலையில் தேறிய உள்நாட்டுற்பத்தி?

2) கற்பிதமான பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கீடு தொடர்பான தரவுகள் வருமாறு. (பெறுமதிகள் யாவும் மில்லியன் ரூபா ஆகும்.)

| விபரம் | தொகை |
|---|---|
| ஊழியர் நட்ட ஈடு | 4000 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 6000 |
| கலப்பு வருமானங்கள் | 800 |
| நிலையான மூலதன நுகர்வு | 1000 |
| உற்பத்தி மீதான உதவுதொகை கழித்த ஏனைய வரிகள் | 50 |
| உற்பத்தி மீதான உதவுதொகைகள் கழித்த வரிகள் | 1100 |
| வெளிநாட்டுத் தேறிய முதன்மை வருமானம் | -500 |
| பகிரப்படா இலாபங்கள் | 150 |
| கம்பனி இலாபங்கள் | 90 |
| சமூகப் பாதுகாப்புக்கான கொடுப்பனவுகள் | 30 |
| தனியார் வருமான வரிகள் | 100 |
| வீட்டுத் துறைக்குரிய அரச மாற்றல்கள் | 50 |

**பின்வருவனவற்றைக் கணிக்க**

1. சந்தைவிலை மொத்த உள்நாட்டுற்பத்தி?
2. சந்தைவிலை மொத்தத் தேசிய வருமானம்?
3. தனியார் வருமானம்?
4. செலவிடக்கூடிய தனியார் வருமானம்?

தொகுப்பு :- திரு.ஆ.பிரபாகரன் ஆசிரியர் - பொருளியல் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

3) கற்பிதமான பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கீடு தொடர்பான தரவுகள் தரப்படுகின்றன. (பெறுமதிகள் யாவும் மில்லியன் ரூபா ஆகும்.)

| விபரம் | தொகை |
|---|---|
| வீட்டுத்துறை நுகர்வு | 500 |
| இலாப நோக்கமின்றி வீட்டுத் துறைக்கு வழங்கும் சேவைகள் | 200 |
| அரச நுகர்வு | 100 |
| மொத்த நிலையான மூலதன ஆக்கம் | 300 |
| இருப்பு மாற்றம் | 200 |
| பெறுமதியில் ஏற்படும் மாற்றம் | 100 |
| பொருட்கள் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகள் | 400 |
| பொருட்கள் காரணியல்லாப் பணிகளின் இறக்குமதிகள் | 250 |
| வெளிநாட்டு முதன்மை வருமானப் பெறுகை | 225 |
| வெளிநாட்டு முதன்மை வருமானக் கொடுப்பனவு | 125 |
| வெளிநாட்டுத் தேறிய நடைமுறை மாற்றல்கள் | -50 |

**பின்வருவனவற்றைக் கணிக்க**

1. தனிப்பட்ட நுகர்வுச் செலவு யாது?
2. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் யாது?
3. மொத்த உள்நாட்டுச் செலவின் பெறுமதி யாது?
4. சந்தைவிலை மொத்த உள்நாட்டுற்பத்தி யாது?
5. சந்தைவிலை மொத்தத் தேசிய வருமானம் யாது?
6. மொத்த உள்நாட்டுச் சேமிப்பின் பெறுமதி யாது?
7. மொத்தத் தேசிய சேமிப்பின் பெறுமதி யாது?
8. மொத்த மூலவளங்களின் பெறுமதி யாது?
9. மொத்த மூலவளங்களின் பயன்பாடு எவ்வளவு?


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk